NIC COPY

| | |
|---|---|
| | தமிழ்நாடு அரசு<br>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை<br>வட்டாட்சியர் அலுவலகம் - மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் |

அறிவிக்கை எண்:02/2025 நாள்: 24-09-2025

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்தில் காலியாக உள்ள நான்கு (4) கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்வதற்காக இவ்வலுவலக அறிவிக்கை எண்:01/2025, நாள்: 06-07-2025-ன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நேர்வில் தற்போது வயது தளர்வு அளிக்கப்பட்டதன் பேரில் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**(குறிப்பு : இவ்வலுவலக அறிவிக்கை எண்: 01/2025, நாள்: 06-07-2025-ன் படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்பொழுது விண்ணப்பிக்க தேவையில்லை.)**

1) விண்ணப்பம் அளிப்பதற்கான கடைசி நாள் : 08-10-2025 (மாலை 5.45 மணி வரை)

| பதவியின் பெயர்: | கிராம உதவியாளர் |
|---|---|
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் - Level 06<br>(ரூ.11,100 - ரூ.35,100) |
| வட்டத்தின் பெயர் | மடத்துக்குளம் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விபரம் |
| 04 | 01. கொழுமம்<br>02. மெட்ராத்தி - 2<br>03. கொமரலிங்கம் கிழக்கு<br>04. கடத்தூர் |

**2.நேரடி நியமனத்தில் பின்பற்றப்படும் இனசுழற்சிவிபரம் :**

| வ. எண் | இன சுழற்சி | இனம் | பொது/ ஆண்/ பெண் | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் |
|---|---|---|---|---|
| 1. | 16 | பட்டியல் வகுப்பினர் (SC) | பொது | முன்னுரிமையற்றவர் |
| 2. | 17 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC & DNC) | பொது | முன்னுரிமையற்றவர் |
| 3. | 18 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தமிழ்வழிக்கல்வி ) BC-PSTM | பெண் | முன்னுரிமையற்றவர் |
| 4. | 19 | பொதுப்போட்டி (தமிழ்வழிக்கல்வி ) (GT-PSTM) | பெண் | முன்னுரிமையற்றவர் |

3.தகுதிகள் :

| | | |
|---|---|---|
| 1. | கல்வித்தகுதி | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC- Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். குறிப்பு (மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.) (குறைந்தபட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு- (தேர்ச்சி/தோல்வி) |
| 2. | இதர தகுதிகள் | 1.விண்ணப்பதாரர் மடத்துக்குளம் வட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2. தமிழில் பிழையின்றி எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>3.விண்ணப்பதாரர்கள் மடத்துக்குளம் வட்டத்தைச் சார்ந்தவர்களாகவும், மடத்துக்குளம் வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். |

3.வயது வரம்பு : (01.07.2025 அன்று உள்ளபடி)

| வ. எண். | இனம் | குறைந்த பட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (முடிவடைந்து இருக்கக்கூடாது) |
|---|---|---|---|
| 1. | இதர பிரிவினர் / பொதுப்பிரிவினர் (GT /OC/FC) | 21 | 32 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / பிற்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) (MBC/ DNC/BC/BCM) | 21 | 39 |
| 3. | அட்டவணை வகுப்பினர்/ அட்டவணை வகுப்பினர் (அருந்ததியினர்) / பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (எந்த பிரிவினராக இருந்தாலும்) (SC/ST/DESTITUTE WIDOW) | 21 | 42 |

I) மாற்றுத்திறனாளிகள் - அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும்

II) முன்னாள் இராணுவத்தினர்

1. பொது பிரிவினருக்கு அதிக பட்சம் 50 வயது
2. இதர பிரிவினர் (பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியலினத்தவர் / பழங்குடியினர்) - 55 வயது.

| | | |
|---|---|---|
| | விண்ணப்பிக்கும் முறை | • விண்ணப்பதாரர்கள் மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவண இணைப்புகளுடன் மடத்துக்குளம் வட்டாட்சியரிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.<br>• மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவங்களை https://tiruppur.nic.in/notice_category/recruitment/ என்ற இணையதள முகவரியை அணுகி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |

<u>முன்னுரிமை</u>

1.ஒன்றாம் வகுப்பு முதல், தொடர்புடைய பணிவிதிகளில் நேரடி நியமனமுறைக்கென வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிவரை (ஒன்றாம் வகுப்பு முதல் 10/12 ஆம் வகுப்புகள், பட்டயம், இளங்கலை/முதுகலைப்பட்டங்கள்) முழுவதுமாகத் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் மற்றும் அச்சட்டத்திற்கான 2020-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட தகுதியுடையவர்கள் ஆவர்.

2.இதர மொழிகளை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று தேர்வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்கள் இம்முன்னுரிமை ஒதுக்கீட்டிற்கு தகுதியுடையவர் அல்லர்.

3.1 முதல் 9 ஆம் வகுப்பு வரை பள்ளிக்கு செல்லாமல் நேரடியாக 10-ஆம் வகுப்புத் தேர்வினை எழுதித் தேர்ச்சி பெற்ற தனித் தேர்வர்கள் மற்றும் பிற மாநிலங்களில் தமிழ் அல்லாமல் இதர மொழியினை பயிற்று மொழியாக கொண்டு பயின்று, பின்பு இம்மாநிலத்தில் நேரடியாகச் சேரும் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்புகள் வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் இம்முன்னுரிமைக்குத் தகுதியுடையவர் அல்லர்.

4.விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் என்பதை உறுதி செய்ய இயலாத நிலையில் தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களை அரசாணை (நிலை) எண் 82, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 16.08.2021 இல் இணைப்பு I மற்றும் II இல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்

5.(அ)கொரோனா தொற்றினால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) நேர்வில் கோவிட் 19 இறப்பு உறுதிப்படுத்தும் குழுத்தலைவரால் ஒப்பமிடப்பட்ட கோவிட் இறப்பிற்கான அலுவலர் ஆவணச் சான்றிதழ் அடிப்படையில் முன்னுரிமை பெறத் தகுதியுடையவராவார்கள்.

(ஆ).இதர காரணங்களினால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) (இ).தனியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும் தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள் அவ்வில்லங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழின் அடிப்படையிலும்,

(ஈ)அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேரமுடியாத கிராமப்புற தாய், தந்தையற்ற நபர்கள் வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் "தாய் தந்தையற்றோர்" சான்றிதழ் அடிப்படையிலும் முன்னுரிமை பெற தகுதியுடையவர்களாவர்.

பொது:

விண்ணப்பதாரர் தனது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களை இணைத்து **வட்டாட்சியர்,** மடத்துக்குளம் **அலுவலகத்தில் நேரடியாகவோ (அலுவலக வேலை நேரத்திற்குள்) அல்லது வட்டாட்சியர் அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.**

1. கல்விசான்று நகல்
2. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று
3. இருப்பிடசான்று (ம) ஆதார் அட்டை / வாக்காளர் அடையாள அட்டை நகல்
4. சாதிச் சான்று நகல்
5. முன்னுரிமை கோருபவராயின் அதற்கான சான்று நகல்
6. குடும்ப அட்டை நகல்.
7. ஓட்டுநர் உரிமம் இருப்பின் அதன் நகல்

நிபந்தனைகள் :

1. விண்ணப்பதாரர்கள் எழுத, படிக்க தெரிந்தவராக இருக்க வேண்டும், மேலும் மிதிவண்டி ஓட்ட தெரிந்தவராக இருக்கவேண்டும்.
2. விண்ணப்பதாரர் கணவரோ, மனைவியோ உயிரோடு இருக்கும்போது வேறு திருமணம் செய்தவராக இருக்க கூடாது
3. விண்ணப்பதாரர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டு முன்னுரிமை மற்றும் இனச்சுழற்சிபடி கிராம உதவியாளர் பணியிடம் வழங்கப்படும்.
4. ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் சமமான மதிப்பெண்களைப் பெற்று ஒரே தரவரிசையில் இடம் பெறும் நிலையில்,சம்பந்தப்பட்டகிராமத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், அவ்வாறு முன்னுரிமை அளித்தும் ஒரே தரவரிசையில் இடம் பெறும் நிலையில், வயது அடிப்படையில் மூத்த விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

24/09/2024

**வட்டாட்சியர்,**
மடத்துக்குளம்